ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

தொடர்பூட்டல் திணைக்களம்
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477418
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

| | |
|---|---|
| வெளியிடுபவர் | புள்ளிவிபரத் திணைக்களம் |
| திகதி | 2018.12.21 |

## 2018 நவெம்பரில் பணவீக்கம் அதிகரித்திருக்கிறது

**முதன்மைப் பணவீக்கம்**

ஆண்டிற்கு ஆண்டுப் பணவீக்கம் : 1.0%

ஆண்டுச் சராசரிப் பணவீக்கம்: 2.7%

மாதாந்தச் சதவீத மாற்றம்: 2.2%

**மையப் பணவீக்கம்**

ஆண்டிற்கு ஆண்டுப் பணவீக்கம்: 3.1%

ஆண்டுச் சராசரிப் பணவீக்கம்: 2.4%

மாதாந்தச் சதவீத மாற்றம்: 0.2%

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (2013=100)[1] ஆண்டுக்கு ஆண்டு மாற்றத்தினால் அளவிடப்பட்டவாறான முதன்மைப் பணவீக்கம் 2018 நவெம்பரில் அதன் வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கிலிருந்தும் மாற்றமடைந்து 2018 ஒத்தோபரின் 0.1 சதவீதத்திலிருந்து 1.0 சதவீதமான அதிகரிப்பினைப் பதிவுசெய்தது. 2018 நவெம்பரில் ஆண்டிற்கு ஆண்டுப் பணவீக்கத்தில் அதிகரிப்பு அவதானிக்கப்பட்டமைக்கு உணவு விடயங்களின் விலைகளில் காணப்பட்ட அதிகரிப்பு முக்கிய தூண்டுதலாக அமைந்தது. ஆண்டிற்கு ஆண்டு உணவுப் பணவீக்கம் 2018 ஒத்தோபரில் -6.6 சதவீதத்திலிருந்து 2018 நவெம்பரில் -3.9 சதவீதத்திற்கு அதிகரித்தது. எனினும், ஆண்டிற்கு ஆண்டு உணவல்லாப் பணவீக்கம் 2018 ஒத்தோபரின் 5.8 சதவீதத்திலிருந்து 2018 நவெம்பரில் 5.2 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

ஆண்டுச் சராசரி அடிப்படையொன்றில் அளவிடப்படுகின்ற தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் மாற்றம் 2018 ஒத்தோபரின் 3.3 சதவீதத்திலிருந்து 2018 நவெம்பரில் 2.7 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.




தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் மாதாந்த மாற்றமானது உணவு வகையில் குறிப்பாக, காய்கறிகள், பச்சை மிளகாய், அரிசி, எலுமிச்சம்பழம் மற்றும்

[1] தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் (2013=100) தொகைமதிப்புப் புள்ளிவிபரத்தினால் தொகுக்கப்பட்டதாகும்.

உருளைக்கிழங்கு ஆகிய விடயங்களின் விலைகள் அதிகரித்தமையின் காரணமாக 2018 நவெம்பரில் 2.2 சதவீதத்தினால் அதிகரித்தது. அதேவேளை, உணவல்லா வகையிலுள்ள விடயங்களின் விலைகள் இம்மாத காலப்பகுதியில் அதிகரித்தவிடத்து சுகாதாரத் துணை வகை உயர்ந்த அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தது. எனினும், போக்குவரத்து (பெற்றோலியம் மற்றும் டீசல்) துணைத் துறையிலுள்ள விடயங்களின் விலைகள் இம்மாத காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்தன.

பொருளாதாரத்தின் அடிப்படைப் பணவீக்கத்தினைப் பிரதிபலிக்கின்ற மையப் பணவீக்கமானது ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் 2018 ஒத்தோபரின் 3.4 சதவீதத்திலிருந்து 2018 நவெம்பரில் 3.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, ஆண்டுச் சராசரி மையப் பணவீக்கம், 2018 நவெம்பரில் 2.4 சதவீதத்தில் மாற்றமின்றிக் காணப்பட்டது.

**தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் அசைவுகள்**

**தளம் : 2013 = 100**

| ஆண்டு | மாதம் | சுட்டெண் | | மாதாந்தச் சதவீத மாற்றம் | | ஆண்டிற்கு ஆண்டு சதவீத மாற்றம் | | ஆண்டுச் சராசரி சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | தேநுவி சுட்டெண் | தேநுவிசு (மைய) | தேநுவி சுட்டெண் | தேநுவிசு (மைய) | தேநுவி சுட்டெண் | தேநுவிசு (மைய) | தேநுவி சுட்டெண் | தேநுவிசு (மைய) |
| 2017 | சனவரி | 119.3 | 121.4 | 1.1 | 0.7 | 6.5 | 7.1 | 4.6 | 6.2 |
| | பெப்புருவரி | 119.9 | 122.0 | 0.5 | 0.5 | 8.2 | 7.1 | 5.1 | 6.4 |
| | மாச்சு | 119.5 | 122.3 | -0.3 | 0.2 | 8.6 | 7.0 | 5.6 | 6.6 |
| | ஏப்பிறல் | 121.0 | 122.5 | 1.3 | 0.2 | 8.4 | 5.9 | 6.0 | 6.6 |
| | மே | 121.8 | 123.0 | 0.7 | 0.4 | 7.1 | 4.7 | 6.1 | 6.4 |
| | யூன் | 123.4 | 123.1 | 1.3 | 0.1 | 6.3 | 4.1 | 6.1 | 6.1 |
| | யூலை | 122.4 | 122.9 | -0.8 | -0.2 | 6.3 | 4.2 | 6.2 | 5.9 |
| | ஓகத்து | 122.3 | 123.0 | -0.1 | 0.1 | 7.9 | 4.8 | 6.5 | 5.8 |
| | செத்தெம்பர் | 123.3 | 123.1 | 0.8 | 0.1 | 8.6 | 4.6 | 6.8 | 5.7 |
| | ஒத்தோபர் | 124.8 | 123.1 | 1.2 | 0.0 | 8.8 | 4.1 | 7.1 | 5.6 |
| | நவெம்பர் | 126.4 | 123.8 | 1.3 | 0.6 | 8.4 | 2.8 | 7.5 | 5.2 |
| | திசெம்பர் | 126.6 | 123.8 | 0.2 | 0.0 | 7.3 | 2.7 | 7.7 | 4.9 |
| 2018 | சனவரி | 125.8 | 123.9 | -0.6 | 0.1 | 5.4 | 2.1 | 7.6 | 4.5 |
| | பெப்புருவரி | 123.7 | 124.4 | -1.7 | 0.4 | 3.2 | 2.0 | 7.2 | 4.1 |
| | மாச்சு | 122.8 | 124.6 | -0.7 | 0.2 | 2.8 | 1.9 | 6.7 | 3.6 |
| | ஏப்பிறல் | 122.9 | 124.8 | 0.1 | 0.2 | 1.6 | 1.9 | 6.1 | 3.3 |
| | மே | 124.3 | 125.1 | 1.1 | 0.2 | 2.1 | 1.7 | 5.7 | 3.1 |
| | யூன் | 126.5 | 125.3 | 1.8 | 0.2 | 2.5 | 1.8 | 5.3 | 2.9 |
| | யூலை | 126.6 | 125.7 | 0.1 | 0.3 | 3.4 | 2.3 | 5.1 | 2.7 |
| | ஓகத்து | 125.4 | 126.3 | -0.9 | 0.5 | 2.5 | 2.7 | 4.7 | 2.5 |
| | செத்தெம்பர் | 124.4 | 126.9 | -0.8 | 0.5 | 0.9 | 3.1 | 4.0 | 2.4 |
| | ஒத்தோபர் | 124.9 | 127.3 | 0.4 | 0.3 | 0.1 | 3.4 | 3.3 | 2.4 |
| | நவெம்பர் | 127.7 | 127.6 | 2.2 | 0.2 | 1.0 | 3.1 | 2.7 | 2.4 |

மூலம்: தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்